பக்கங்கள்:-17

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 18 | புதன்கிழமை | 03.01.2024 | அதிர்வு 155 |
|---|---|---|---|---|---|

## போதை வியாபாரி துண்டுதுண்டாக வெட்டிக்கொலை!

### தென்னிலங்கையில் பயங்கரம்

ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரி ஒருவர் துண்டுதுண் டாக வெட்டிப் படுகொலை 06

### ஜனாதிபதிக்கு எதிரான போராட்டத்தைத் தடுக்கும் வகையில்

## கஜேந்திரகுமார், கஜேந்திரன் உட்பட 8 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்யவுள்ள நிலையில் அவருக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் எனக் கருதி 8 பேருக்கு எதிராகத் தடை உத்தரவு கோரி யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கில் பல்வேறு கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்காக 05



### பொருளாதாரத் தீர்வையும், அரசியல் தீர்வையும் வென்றெடுக்க

## தமிழ் எம்.பிக்களே அரசுடன் இணைந்து பணியாற்றுங்கள்

### வடக்குக்கு விஜயம் செய்வதற்கு முன் ஜனாதிபதி ரணில் இப்படி அழைப்பு

**"அரசுடன் சேர்ந்து பணியாற்ற வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் பொருளாதாரத் தீர்வையும், அரசியல் தீர்வையும் நாம் விரைவில் வென்றெடுக்க முடியும்."**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** 05



## மொட்டு எம்.பியை விரட்டியடித்த ஊர் மக்கள்




கடற்படையினரால் முன்னெடுக்கப்படும் நீர் சுத்திகரிப்பு வேலைத்திட்டம் ஒன்றின் பணிக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தம்புத்தேகம, கொன்வெவ கிராமத்துக்கு நேற்று சென்றிருந்தபோது அங்கு ஒன்றுகூடிய மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

எஸ்.எம். சந்திரசேன எம்.பி. மற்றும் வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் உள்ளிட்ட சிலரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்த குறித்த கிராம மக்கள், அவர்களின் வாகனத்தை முற்றுகையிட்டதால் பதற்றம் நிலவியது.

இதையடுத்து சந்திரசேன எம்.பி. உள்ளிட்ட குழுவினர் அங்கிருந்து வெளியேறினர்.

### 'ஜே.என். 1' பிறழ்வு தொடர்பில் அவதானத்துடன் இருக்கின்றோம்

## கொரோனா காலத்தில் பின்பற்றிய சுகாதார விதிகளைப் பின்பற்றுங்கள்

### மக்களிடம் அமைச்சர் வேண்டுகோள்



இந்தியாவில் பதிவாகியுள்ள "ஜே.என். 1" புதிய கொவிட் பிறழ்வு தொடர்பில் சுகாதார அமைச்சு தொடர்ந்து அதானத்துடன் இருக்கின்றது எனவும், இதுவரை நடத்தப்பட்ட மாதிரிப் பரிசோதனைகளில் இலங்கையில் எந்தவொரு நோயாளியும் பதிவாகவில்லை எனவும் கைத்தொழில் 06




இன்று இரண்டு சிறிய தகவல்கள் முதலில் வாசகர்களுக்கு.

முதலாவது – நாளை வடக்கே வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு நான்கு நாள்கள் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கின்றார். அவற்றை முடித்துக் கொண்டு அவர் கொழும்பு திரும்பிய பின்னர் – பெரும்பாலும் 10 ஆம் திகதிக்கு பின்னர் – வன்னி மாவட்டத்தின் தமிழ் எம்.பி. ஒருவருக்கு வன்னியின் ஒரு மாவட்டத்துக்கான 06

# பெப்ரவரி முதல் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வருமான வரி பதிவினை கொண்டிருப்பது கட்டாயம்




பெப்ரவரி முதலாம் திகதி முதல் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வருமான வரிக்காக பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அனைவரும் வரி செலுத்த வேண்டிய அவசிய மில்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவிற்கு மேல் ஊதியம் பெறுவோர் மாத்திரம் இந்த வரிக்கொள்கைக்கு உட்பட்டவர்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிக்கும் போதும், கட்டட நிர்மாணத்திற்கு அனுமதி கோரும் போதும், மோட்டார் வாகன மொன்றை பதிவு செய்யும் போதும், உரிமத்தை புதுப்பித்தல் மற்றும் காணி உரிமையைப் பதிவு செய்தலின் போதும் வரி செலுத்துனர் அடையாள இலக்கம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

WWW.IRE.GOV.LK எனும் இணை யத்தள முகவரிக்கு பிரவேசிப்பதன் மூலம் 18 வயதிற்கு மேற்பட்டோர், வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு மேலதிகமாக உள்நாட்டு இறைவரி பிரதேச அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் இதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව – ශ්‍රී ලංකාව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம் – இலங்கை
Inland Revenue Department – Sri Lanka

# இறைவரி ஆணையாளர் நாயகமாக சேபாலிகா சந்திரசேகர நியமனம்

புதிய உள்நாட்டு இறைவரி ஆணை யாளர் நாயகமாக டபிள்யு.ஏ. சேபா லிகா சந்திரசேகர நியமிக்கப்பட்டுள் ளார்.

டபிள்யு.ஏ. சேபாலிகா சந்திரசேகர, 1993 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறை வரி திணைக்களத்தில் மதிப்பீட்டாள ராக இணைந்து 30 வருடங்களுக் கும் மேலாக அந்நிறுவனத்தில் பல வேறு பதவிகளை வகித்துள்ளார்.

அவர் இதுவரை உள்நாட்டு இறை வரி திணைக்களத்தின் பிரதி பணிப் பாளர் நாயகமாக கடமையாற்றி வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது.

# இரசாயன உரத்திற்கு வற் வரியை விதிக்காதிருப்பது குறித்து ஆய்வு

இரசாயன உரத்திற்கு பெறுமதி சேர் வரியை விதிக்காதிருப்பது தொடர் பில் அரசாங்கம் அவதானம் செலுத்தி யுள்ளோம் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் போகத்தில் இருந்து அதனை நடைமுறைப்படுத்த தற் போதுதிட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி அது தொடர்பில் சாதகமான முறையில் பதிலளித்துள்ளார் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரி வித்துள்ளார்.



பெரும்போக பயிர்ச்செய்கைக்கு அவசியமான அனைத்து இரசாயன உரங்களும் இறக்குமதி செய்யப்பட் டுள்ளன.

அந்த உரத்தொகையை பழைய விலைக்கே விவசாயிகளுக்கு வழங்க வுள்ளதாக விவசாய அமைச்சர் தெரி வித்துள்ளார்.




## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



### "தாயகஒலி" பிரதம ஆசிரியர்

*தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)*

### (அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

# சிறுகதைப் போட்டி

**இருபிரிவுகளாக நடத்தப்படும்**

**(பரிசுத் தொகை 1 இலட்சம்)**

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.

* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

***அனுப்ப வேண்டிய முகவரி :***
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124



# இன்று இலங்கை வருகிறது சிம்பாப்வே கிரிக்கெட் அணி

சிம்பாப்வே கிரிக்கெட் அணி இன்று இலங்கை வரவுள்ளது. அந்த அணி இலங்கை நேரப்படி மாலை 6 மணிக்கு நாட்டை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிம்பாப்வே மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் மூன்று ஒருநாள் மற்றும் மூன்று இருபதுக்கு 20 போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ஒருநாள் போட்டிகள் எதிர்வரும் 6, 8 மற்றும் 11ஆம் திகதிகளிலும், இருபதுக்கு 20 போட்டிகள் எதிர்வரும் 14, 16 மற்றும் 18ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கான அனுமதிச்சீட்டுக்களை இலங்கை கிரிக்கெட்டின் இணையத்தளம் மூலம் பெற முடியும்.

அத்துடன், எதிர்வரும் 4ஆம் திகதி காலை 9 மணி முதல் கொழும்பு வித்யா மாவத்தை மற்றும் ஆர். பிரேமதாஸ மைதானத்தில் உள்ள கருமபீடங்களிலும் அனுமதிச் சீட்டுக்களைப் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று முதல் 3 நாள்கள் எதிர்ப்புப் போராட்டங்கள்

### இலங்கை மின்சார ஊழியர் சங்கம் அறிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான உத்தேச சட்ட மூலத்துக்கு எதிராக இன்று முதல் மூன்று நாள்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலத்தை உடனடியாக மீளப் பெறுமாறு மின்சக்தி அமைச்சருக்கு அறிவிக்கபட்டுள்ளது என்று இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையை ஜனாதிபதியுடன் சேர்ந்து விற்பனை செய்ய மின்சக்தி அமைச்சர் விரும்புகின்றார் எனவும், மேற்படி சட்டமூலம் நாடாளுமன்றத்தில் தன்னிச்சையாக நிறைவேற்றப்படுமாயின் பாரிய வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தநிலையில், இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக இன்று முதல் மூன்று நாள்களுக்குப் பாரியளவிலான கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் ரஞ்சன் ஜெயலால் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரணிலின் வருகையையொட்டி வவுனியாவில் மாதிரிக் கூட்டம்



(ந.லோகதயாளன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு வருகையின்போது நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கான மாதிரிக் கூட்டம் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோரின் முன்னிலையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்ட செயலகங்களில் எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கான முன்னாயத்த மாதிரிக் கூட்டமே நேற்று இடம்பெற்றது.

இதன்போது வடக்கின் 5 மாவட்டங்கள் சார்பிலும் ஜனாதிபதியிடம் முன்வைக்கும் திட்டங்கள், மாகாண சபையால் முன்வைக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் தனித்தனியே பெறுமதிகளுடன் பட்டியலிடப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டது.

இதன்போது வடக்கின் 5 மாவட்ட அரச அதிபர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ் மாவட்ட இணைப்புக்குழு தெரிவாகியது



**(ந.லோகதயாளன்)**

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ் மாவட்ட இணைப்பாளர்கள் தெரிவு நேற்று இணுவிலில் இடம்பெற்றது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர் களின் ஒருவரான யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், செயலாளர் ஆர்.ராகவன், துணைத் தேசிய அமைப்பாளர் கு.சுரேந்திரன், பொருளாளர் துளசி ஆகி யோரின் நெறிப்படுத்தலில் இது நடைபெற்றது.

இதன்போது ஐந்து கட்சியில் இருந்தும் தலா மூன்று பேர் வீதம் மாவட்ட இணைப்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் சி.சிவகுமார், கே.என். கமலாகரன் (குகன்), பா.கஜ தீபன், என்.விந்தன் கனகரட்ணம்,சபா குகதாஸ்,தி.நிரோஷ், சு.நிஷாந்தன்,ரா. இரட்ணலிங்கம், இ.பகீதரன், செ.மயூரன், கி.மரியறோசறி, கி.கணைச்செல்வன், ஆ.சுரேஷ்குமார், த.கோகுலன் போன்றோர் ஐந்து கட்சி சார்ந்த யாழ். மாவட்ட இணைப்பாளர்களாகவும் குறித்த இணைப்பாளர்களுக்கு தலைமை தாங்கும் ஒருங்கிணைப்பாளராக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் என்.விந்தன் கனகரட்ண மும் நியமிக்கப்பட்டனர்.

# உடுப்பிட்டியில் மதுபானசாலைக்கு எதிராகக் கடையடைப்புப் போராட்டம்

யாழ். வடமராட்சி, உடுப்பிட்டி பகுதியில் உள்ள மதுபான சாலைக்கு எதிராக இன்று கடையடைப்புப் போராட்டம் மேற் கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பையும் மீறி மீளத் திறக் கப்பட்ட மதுபானசாலையால் கடுமையாக மக்கள் பாதிக் கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் அதனை உட னடியாக அகற்றக் கோரி இன்று காலையில் இருந்து மதியம் வரை உடுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள கடைக ளைப் பூட்டி கடையடைப்புக்கு உடுப்பிட்டி சமூக மட்ட அமைப்புக்கள் ஒன்றாக சேர்ந்து அழைப்பு விடுத்துள்ளன.

வணிக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், சந்தை வியாபாரிகள் அனைவரும் இதற்கான ஆதரவைத் தெரிவித்துள்ளன.

அதேவேளை, கண்டன ஆர்ப்பாட்டமும் உடுப்பிட்டிச் சந்தியில் இருந்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

சமூக அக்கறை உள்ளவர்கள், அரசியல் தலைவர்கள் அனைவரையும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஆதரவு தருமாறு உடுப்பிட்டி சமூக மட்ட அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

## கஜேந்திரகுமார், கஜேந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாளை யாழ்ப்பாணம் வருகின்றார். யாழில் எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை வரை தங்கியிருக்கும் அவர், வடக்கின் பல்வேறு இடங்களில் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதிக்கு எதிர்ப் புத் தெரிவிப்பதற்கான போராட்டத்தைத் தடுக்கும் வகையில் 8 பேருக்குத் தடை கட்டளை கோரி பொலிஸார் நீதிமன்றில் விண்ணப்பித்துள்ளனர்.

இது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாட்டை நேரடியா கவோ, சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இன்று முன்வைக்குமாறு நீதிமன்றம் பிரதி வாதிகளுக்குக் கட்டளையிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன் னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமி கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள் என 8 பேருக்கு எதிராகத் தடை கட்டளை கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## தமிழ் எம்.பிக்களே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

ஜனாதிபதி நான்கு நாள் பயணம் மேற்கொண்டு நாளை வடக்குக்கு வருகின்றார். இந்நிலையில், நேற்று கொழும்பு ஊட கம் ஒன்றுக்குப் பொருளாதாரப் பிரச்சினை, தேசிய இனப்பிரச் சினை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒருபுறத்தில் நாட்டின் பொருளாதாரத்தை நாம் கட்டி யெழுப்ப வேண்டும். அதேவேளை, மறுபுறத்தில் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை நாம் காண வேண்டும். இந்த இரண்டு பிரதான விடயங்களும் நிறைவேற வடக்கு – கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழுமையான ஆதரவு மிகவும் அவசியமானது.

எனவே, இந்த இரண்டு கருமங்களையும் முன்னெடுக்கின்ற அரசுடன் சேர்ந்து பணியாற்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் முன்வர வேண்டும்.

இன, மத, மொழி வேறுபாடின்றி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரே குடையின் கீழ் பயணித்தால்தான் பொரு ளாதாரத் தீர்வையும், அரசியல் தீர்வையும் நாம் விரைவில் வென்றெடுக்க முடியும்.” – என்றார்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இணைப்புக் குழு இணைத்தலைவர் பதவியை வழங்குவார் எனத் தெரிகிறது.

தன்னிடம் அடைக்கலம் தேடி வருவோருக்கு ரணில் தாராளம் காட்டுவார் என்பது உண்மையே!

மற்றைய – விடயம் பெரும் போதைப் பொருள் கடத்தலில் வடக்கு அரசியல் குடும்பத்தின் புத்திரர் ஒருவர் சிக்குண்டமை குறித்து குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

அது பற்றிய செய்தியை வாட்ஸ் அப் குரூப் ஒன்றில் பகிர்ந்து கொண்ட தமிழ் அரசு அதிகாரி ஒருவருக்கு சம்பந்தப்பட்ட தரப்புகளில் இருந்து 'செம டோஸ்' கொடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல். அரண்டு போயிருக்கிறார் அந்த அதிகாரி.

அடுத்தது – தென்னிலங்கை அரசியல் தகவல் ஒன்று.

'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம். இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம்' என்பார்கள்.

அந்த மாதிரி, புது அரசியல் கூட்டணி அமைப்பதில் அல்லாடுகின்றார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ.

மொட்டுக் கட்சிக் கூட்டிலிருந்து பிரிந்து, டலஸ் அழகப்பெருமா தலைமையில் செயற்பட்ட அணியிலிருந்து இப்போது நான்கு எம்.பிக்கள் சஜித் தரப்புக்குப் பாய்கின்றனர். – இது பழைய செய்தி. டலஸ் அழகப்பெருமா தலைமையிலான சுதந்திர ஜனதா சபையிலிருந்து பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பேராசிரியர் சன்ன ஜயசுமண, கலாநிதி நாளக கொடஹேவா, டிலான் பெரேரா ஆகிய நால்வருமே வெளியேறி சஜித் பக்கம் பாய்கின்றனர். இவர்களில் கலாநிதி நாளக கொடஹேவா, பேராசிரியர் சன்ன ஜயசுமண ஆகியோர் சஜித் அணியில் சேர்வதை ஏற்கனவே சஜித் அணியிலுள்ள முஸ்லிம் தரப்புகள், கட்சிகள் கடுமையாக எதிர்க்கின்றன என்று தகவல்.

இவர்கள் இருவரும் – கலாநிதி நாளக கொடஹேவா மற்றும் பேராசிரியர் சன்ன ஜயசுமண இருவரும் – முன்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது அவருக்கு இடது, வலது கைகள் போல மிக நெருக்கமாகச் செயற்பட்டவர்கள்.

பௌத்த – சிங்களத் தீவிரப் போக்குக் கொண்ட இவர்களின் 'புத்திசாலித்தனம்' காரணமாகவே முன்னர் உயிரிழந்த கொவிட் தொற்றாளர்களின் உடலங்களைப் புதைக்க முடியாது, எரிக்க வேண்டும் என்று கோட்டாபய கடும் நிலைப்பாடு எடுத்து, முஸ்லிம்களின் ஜனாஸாக்களையும் எரிக்க வைத்தார் என்று முஸ்லிம் எம்.பிக்கள் கருதுகின்றனர்.

இந்த இருவரையும் சஜித் பிரேமதாஸ தமது அணியில் இணைத்தால், ஹக்கீம், ரிஷாத் தரப்புக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் அணியில் சேர்ந்து விடும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

பாவம்...சஜித்! தீர்மானம் எடுக்க முடியாமல் அல்லாடுகின்றாராம்...!

## போதை வியாபாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பயங்கர சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் காலி, இக்கடுவை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய ஜயலத் குமாரசிறி என்ற நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அவரது வீட்டுக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் வைத்து அவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஓட்டோ ஒன்றில் கூரிய ஆயுதங்களுடன் வந்த மூவர், மேற்படி நபரின் தலையையும், இரண்டு கைகளையும், கால் ஒன்றையும் துண்டுதுண்டாக வெட்டிப் படுகொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஏற்பட்டபோட்டிகாரணமாகஇந்தக்கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார், கொலைச் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

## கொரோனா காலத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இருப்பினும், கடந்த கொவிட் பரவலின் போது பின்பற்றிய முறையான சுகாதார நடைமுறைகளைப் மீண்டும் பின்பற்றுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், தற்போது நாட்டில் மீண்டும் பரவ ஆரம்பித்திருக்கும் தட்டம்மை நோயைக் கட்டுப்படுத்துவதற்காகத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை அடுத்த வாரம் முதல் நாடு முழுவதுமுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் ஊடாக முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்நாட்டு மக்களுக்கு இலவச சுகாதார சேவையின் கீழ், உயர் தரத்திலான மருந்துகளை வழங்கும் வேலைத்திட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கொவிட் நெருக்கடிக்குப் பிறகு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால், ஒரு சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. தற்போது, நாட்டின் நிதி நிலை சீராக முன்னேறி வருவதால், அத்தியாவசிய மருந்துகளை பெற, அரசின் கொள்முதல் பணிகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

மருத்துவமனைகளுக்கு மருந்துப் பொருள்களைப் பெறுவதற்கான செயல்முறையை வெளிப்படையானதாக மாற்றும் நோக்கத்துடன் கொள்முதல் நடவடிக்கைகளை டிஜிட்டல் மயமாக்கத் தேவையான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக கொழும்பு மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களின் கணினிப் பிரிவுகளின் ஆலோசனைகள் பெறப் படுகின்றன. அதன்படி, எதிர்காலத்தில் குறித்த கொள்முதல் நடவடிக்கைகளை டிஜிட்டல் மயமாக்கல் மூலம் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

மேலும் , இவ்வருட வரவு – செலவுத் திட்டத்தில் ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபையின் தர ஆய்வுகூடத்தை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். அதன் கொள்திறன், மனித வளம் மற்றும் அதன் கட்டமைப்பு மாற்றங்களை இந்த வருடத்தில் மேற்கொள்ள முடியும்.

மேலும், இந்நாட்டுக்குத் தேவையான 850 வகையான அத்தியாவசிய மருந்து வகைகள் இனங்காணப்பட்டுள்ளன. அந்த மருந்துகளில் மக்களின் உயிர் காக்கும் அனைத்து மருந்துகளும் எங்களிடம் உள்ளன. கண்களுக்குத் தேவையான லென்ஸ்கள், இதய நோயாளிகளுக்கான அறுவை சிகிச்சை உபகரணங்கள் (ஸ்டென்ஸ்), எலும்பியல் அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

கடந்த வருடம் டெங்கு நோயினால் 50 பேர் உயிரிழந்துள்ளனர். இது மிகவும் கவலையான நிலை. டெங்கு நோயை அரசால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. அதற்கு ஒட்டுமொத்த சமூகத்தின் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். அத்துடன், பாதுகாப்புப் படை உறுப்பினர்களின் உதவியுடன் சூழல் சுத்திகரிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முடிந்த வரை சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தலாம்.

தட்டம்மை நோயை ஒழித்துள்ள நாடாக உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கையை அடையாளங்கண்டுள்ளது. ஆனால், கடந்த வருடம் சுமார் 700 அம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளமை தொடர்பில் சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது.சில காரணங்களால், தட்டம்மை நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தியின் அளவு குறைவாக உள்ளதால் தற்போது நாட்டில் மீண்டும் தட்டம்மை நோய் ஏற்படுவதாக நம்பப்படுகிறது. எனவே, இந்த நிலையைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அதன்படி, ஜனவரி மாதம் இரண்டாவது வாரத்தில் இருந்து நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள் ஊடாக நோய்த்தடுப்பு தடுப்பூசியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தட்டம்மை நோயை தடுக்கும் வகையில் குழந்தைகளுக்கு தேவையான தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பேற்றோரை கேட்டுக்கொள்கின்றோம்.

இது தவிர, இந்தியாவில் பதிவாகி வரும் புதிய "ஜே.என். 1" கொவிட் பிறழ்வு குறித்து இந்நாட்களில் எமது நாட்டிலும் கருத்தாடல் இடம்பெற்று வருகின்றது. தற்போது உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளபடி, இது தொடர்பாக தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம். "ஜே.என். 1" கொவிட் பிறழ்வு குறித்து சுகாதார அமைச்சு தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆதரவுடன், இது தொடர்பாக மாதிரி சோதனைகள் நடத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில், இந்தியாவில் பதிவாகியுள்ள புதிய கொவிட் பிறழ்வு கொண்ட நோயாளிகள் யாரும் பதிவாகவில்லை. ஆனால், கடந்த கொவிட் காலத்தில் பின்பற்றப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றார்.



# 50 ஆயிரம் தொன் கீரி சம்பாவை இறக்குமதி செய்ய நடவடிக்கை

எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் 50 ஆயிரம் மெட்ரிக் தொன் கீரி சம்பா அரிசி தொகையை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து அரிசி இறக்குமதியை மேற்கொள்வது மிகவும் சிரமமானது என சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும், 21 ஆம் திகதிக்கு முன்னர் கீரி சம்பா அரிசியைக் குறிப்பிட்ட அளவு இறக்குமதி செய்ய முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இன்று கீரி சம்பா அரிசி தொகையொன்று நாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசியப் பொருள்களுக்கான வரியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் கோரிக்கை

"அத்தியாவசியப் பொருள்களுக்கான வரியை மீளாய்வுக்கு உட்படுத்தி நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் வடமாகாண சபையின் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"புதுவருடம் அன்றே மக்களுக்கு இலங்கை அரசாங்கம் பேரதிச்சியினை ஏற்படுத்தியிருக்கின்றது. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில் முதலாம், இரண்டாம் வாசிப்பிலே சமர்ப்பிக்கப்பட்ட விடயத்தில் உண்மைகளை முடிமறைத்து 97 பொருள்களின் விலை உயர்த்தியிருக்கின்றது.

இவ்வருடத்திலே இலங்கை வாழ் மக்கள் மீது பெரும் வரிச்சுமையை அரசு செலுத்தியுள்ளது. குறிப்பாக வரிக்குள்ளே மதுபானம், புகைத்தல், ஆடம்பர, இலத்திரனியல் பொருள்களுக்கு விலை அதிகரிக்கப்பட்டிருந்தாலும், மறுபுறத்தில் அத்தியாவசிய பொருள்களுக்கு விலை உயர்வடைந்திருப்பது பேரதிர்ச்சியினை ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த 30வருடம் யுத்த நடந்த போதிலும் கூட இப்படியான வரி அதிகரிக்கப்படவில்லை. விலைவாசியும் அதிகரிக்கப்படவில்லை. பொருள் தட்டுப்பாடு ஏற்படவில்லை.




30 வருட யுத்தத்திலும் கூட பல்லாயிரம் கோடி ரூபாவைச் செலவழித்த இவ்வரசாங்கம் 30 வருட யுத்தம் முடிந்த பிற்பாடு 2024 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இவ்வளவு வற்வரியிலான சுமையை மக்கள் மீது சுமத்தியுள்ளது.

எற்கனவே இருந்த அரசாங்கங்களும் ஊழலுக்கு, மோசடிக்கு, துஷ்பிரயோகத்திற்கு பெயர்போனவையாக இருந்தன. மக்களால் விரட்டப்பட்ட அரசாங்கமும் இருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆதரவு பெறமால் நாடாளுமன்ற பெரும்பான்மை வைத்துக் கொண்டு வந்து ஜனநாயக விரோத வரவு – செலவு திட்டத்தை நிறைவேற்றியுள்ளார்.

குறிப்பாக அத்தியாவசிய பொருள்கள் மீதான வரி அதிகரிப்பானது ஏழை மக்கள், அன்றாடம் கூலித்தொழினை செய்வர்கள், வடக்கு – கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், மலையக மக்களது வயிற்றில் பேரிடியாக காணப்படுகின்றது.

இந்த வரவு – செலவு திட்டத்தை சமர்ப்பித்து, மக்களுக்கு எந்த பயனும் இல்லாது வாட்டிவதைக்கின்ற அரசாங்கமாக இது மாறியுள்ளது.

நாடாளுமன்றத்தில் பேசக்கூடிய விடயங்களை பேசாமல், தடுத்து நிறுத்தவேண்டிய விடயங்களை தடுத்து நிறுத்தாமல், வரவு – செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கமாலும் இருந்து கொண்டு தற்போது வெளியில்வந்து மக்கள் மீது வரவு – செலவு திட்டம் தொடர்பாக குரல் கொடுக்கின்றார்கள்.

அரசாங்கம் வரிசலுகை தொடர்பாக மீளாய்வு செய்ய வேண்டும். உடனடியாக அத்தியாவசியப் பொருள்களுக்கான வரியை மீளாய்வு உட்படுத்தி நீக்குவதற்கான நடவடிக்கை செய்ய வேண்டும்."– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தாயகம் மீளுங்கள்!

இந்தியாவில் நீண்ட காலம் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் எனப் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை இந்திய அரசை வலியுறுத்திருக்கிறார்.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கையில் குடியேறி இரு நூற்றாண்டுகள் நிறைவடைந்தமையை நினைவு கூரும் வகையில் புதுடில்லியில் சிறப்பு அஞ்சல் முத்திரை அண்மையில் வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போதே தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

“இலங்கையிலிருந்து வெவ்வேறு காலகட்டங்களில் தமிழகத்திற்கு வருகை தந்த ஐந்து முதல் ஆறு லட்சம் வரையிலான தமிழர்களுக்கு முறையான தங்குமிடம் உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பன உட்பட நிறைய வாக்குறுதிகள் தரப்பட்டன. அவை உடனடியாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றப்பட வேண்டும். வெவ்வேறு காலகட்டங்களில் இலங்கையில் போர் நடந்து கொண்டிருக்கும் சூழலில், இந்திய வம்சாவளி தமிழர்கள் பலர் இந்தியாவிற்கு வருகை தந்தனர். அவர்களில் பலரும் இங்கு குடியுரிமை இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிலர் சட்டவிரோதமாகவும் இங்கு வருகை தந்துள்ளனர். அவர்களில் பலர் இங்கு குழந்தை பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் எனப் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசிற்கு கோரிக்கை வைத்திருக்கிறோம். இதற்கு விரைவில் நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.” - என்று அவர் கூறியிருக்கின்றார்.

ஐந்து லட்சம் முதல் ஆறு லட்சம் வரையான தமிழர்கள் என்று அண்ணாமலை கூறுகின்றமையால் அது சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தை அடுத்து இலங்கையில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட மலையகத் தமிழர்கள் பற்றியதான கருத்து என்று கொள்ளப்படக்கூடியது.

அதே சமயம் இலங்கையில் இனவாத யுத்தம் வெடித்தமையை அடுத்து, இலங்கையின் வடக்குக் கிழக்கைத் தமது பூர்விகத் தாயகமாகக் கொண்ட தமிழர்களும் உயிர்ப் பாதுகாப்பு கருதி தமிழகத்துக்கு படகுகளில் அகதிகளாக இடம்பெயர்ந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் 90களின் முற்பகுதியில் இடம் பெயர்ந்தவர்கள். இப்படி இடம் பெயர்ந்தவர்களில் இன்னும் சுமார் ஒரு லட்சம் பேர் ஏதிலிகளாக சிறப்பு முகாம்களிலும் வெளியிலும் நாள்களைக் கழித்துக் காண்டிருக்கின்றனர். 30 ஆண்டுகள் கழிந்தும் அவர்களுக்கும் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளுக்கும் இந்தியக் குடியுரிமை வழங்கப்படவே இல்லை.

இலங்கையில் இனயுத்தம் வெடித்ததை அடுத்து நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்கள் உயிர்ப் பாதுகாப்புக் கருதி லட்சக்கணக்கில் நாட்டை விட்டுத் தப்பி ஓடினர்.

தமிழர் தாயகத்திலிருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் பூமிப் பந்து எங்கனமும் தூக்கி வீசப்பட்ட ஈழத் தமிழர்கள் தாம்தாம் புகலிடம் புகுந்த இடங்களில் அவர்களை நிலை நிறுத்திக் கொண்டனர்.

உலகளாவிய ரீதியில் இவ்வாறு புகலிடம் புகுந்த சுமார் பத்து லட்சம் ஈழத் தமிழர்கள் ஒரு சில ஆண்டுகளிலேயே அந்தந்த நாடுகளின் குடியுரிமைகளைப் பெற்று அங்கங்கு தங்களை ஸ்தாபித்துக் கொண்டும் விட்டனர்.

ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்த தேசங்களில் இப்படி முப்பது ஆண்டுகள் கழிந்த பின்னரும் இன்னும் அந்த நாட்டின் குடியுரிமை பெறாமல், அவர்கள் பல்லாயிரக்கணக்கில் அகதிகளாகத் தொடர்ந்து வாழும் ஒரே இடம் தமிழகம்தான். இந்தியா தான்.

இவர்களில் அனேகமானோர் இன்னமுமே அகதி முகாம்களில்தான் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பலத்த கட்டுப்பாடுகளுக்கு மத்தியில்தான் வாழும் இக்கட்டில் உள்ளனர்.

இனவாத யுத்தம் நடந்த இலங்கையில் எஞ்சியிருக்கக் கூடிய அகதி முகாம்களுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தில் உள்ள மேற்படி அகதி முகாம்கள் மேம்பட்டவை அல்ல.

எனவே இந்த ஈழத் தமிழ் அகதிகள் குடியுரிமையுமின்றி, வெளிப்படையான சுதந்திரங்களுமின்றி, அடைக்கலம் புகுந்த அந்த மண்ணில் அகதி வாழ்வு வாழ்வதைவிட, தாயகம் திரும்பித் தமது பூர்வீக இடமான வடக்கு கிழக்கில் மீள நிலை கொள்வது புத்திசாதுரியமான நடவடிக்கையாக இருக்க முடியும். எது, எப்படியாயினும் அது தொடர்பான முடிவை - தீர்மானத்தை - எடுக்க வேண்டியவர்கள் அந்த அகதி மக்களே.

யுத்தத்தால் சீரழிந்த வடக்கு - கிழக்கில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை என்பது உண்மைதான். அது திரும்புமா என்பதும் கேள்விக்குறிதான்.

ஆயினும், நமது வடக்கு - கிழக்கு தமிழர் தாயக மண்ணை நாம் காபந்து பண்ணிப் பேணுவதற்கு - நமது குடிசனப் பரம்பல் மீண்டும் ஸ்திரமாவதற்கு - இந்த ஈழத் தமிழ் அகதிகள் தமது தாயகம் திரும்புவது பயனுள்ளதாக இருக்கும். அவர்களின் எதிர்கால நலனுக்கும் அதுவே உகந்ததாக இருக்க முடியும்.

# ரணிலை ஆதரிப்பதன் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும்

## வஜிர அபேவர்தன கூறுகிறார்





”நாட்டின் தற்போதைய நிலையில் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதன் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும்.”

– இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் அவர் தெரிவிக்கையில் –

“ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடப்போவதாக தெரிவிப்பவர்களால் நாட்டில் என்ன செய்ய முடியும் என கேட்கிறோம். அத்துடன் யுத்தத்தை வெற்றிகொண்ட மஹிந்த ராஜபக்ஷ தற்போது நாட்டின் பொருளாதாரத்தை வெற்றிகொள்ளவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து வருகிறார்.

அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போகிறோம் என தற்போது பலரும் தெரிவித்து வருகின்றனர்.

இவ்வாறு தெரிவிப்பவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றால் அவர்களால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப என்ன செய்ய முடியும்? இவர்களின் ஏமாற்று பேச்சுக்களுக்கு மக்கள் மீண்டும் ஏமாந்துவிடக்கூடாது.

அதேநேரம் போராட்ட காலத்தில் மொட்டுக் கட்சி மக்களுக்கு அடிபணிந்து செயற்பட்டபோதும் சர்வதேசத்தின் கோரிக்கைக்கைக்கு அடிபணியாமல் எடுத்த தீர்மானத்துக்கு நன்றி தெரிவிக்கிறோம்.” – என்றார்.



# ஸ்ரீலங்காக் கிரிக்கெட் தொடர்பில் ஆராய்ந்த அமைச்சரவை உப குழு அறிக்கை கையளிப்பு

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் தலைமையிலான குழுவினால் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கிரிக்கெட் கவுன்ஸிலினால், ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது.

இந்த குழுவில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

மேற்படி குழுவினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக இதன்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், புதிய விளையாட்டு சட்ட மூலத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளார் என இதன்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கைப் பிரஜைகள் இரணைத்தீவிற்குச் செல்வதற்கு கடற்படை தடை விதிக்கக் கூடாது என்று அறிவுறுத்தல்

## மனித உரிமைகள் ஆணைக்குழு பணிப்புரை

(ந.லோகதயாளன்)

இலங்கைப் பிரஜைகள் இரணைத் தீவிற்குச் செல்வதற்கு கடற்படையினர் தடை விதிக்கக் கூடாது என நாட்டின் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. மனித உரிமை கள் செயற்பாட்டாளரும் ஊடகவிய லாளருமான ருக்கி பெர்ணாண்டோ முன்வைத்த அடிப்படை உரிமை மீறல் மனு குறித்த விசாரணையின்போது ஆணைக்குழு அறிவுறுத்தலை வழங்கி யுள்ளது.

"கிளிநொச்சி மாவட்டத்தின், இரணைத்தீவுக்கு கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி செல்ல முயன்ற போது என்னை கடற் படையினர் தடுத்தன் மூலம் எனது அடிப்படை உரிமை மீறப்பட்டது" என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அவர் முறைப்பாடு செய்திருந்தார்.

இதையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழு, சட்டரீதியாக தடைகள் இருந்தால் மாத்திரமே முன் னனுமதியைப் பெறுவதற்கு கோரிக்கை வைக்க வேண்டும் அல்லது அறி வித்தல் கொடுக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

நடமாடும் சுதந்திரம் இலங்கை அரசியல் யாப்பு பிரிவு 14 (1) (எச்) மற்றும் இலங்கையும் கைச்சாத் திட்டுள்ள சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தீர்மானம் 12 கீழ் அளிக்கப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்திய அந்த ஆணைக்குழு, "எதிர்காலத்தில் இரணைத்தீவிற்கு குடி மக்கள் செல்லும் போதும் அவர்களின் நடமாடும் சுதந்திரத்தில் குறுக்கீடுகள் ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதால், இதில் மேற்கொண்டு பேச்சுவார்த் தைகளை நடத்துவதோ அல்லது இந்த விடயத்தை இணக்கப்பாடு காணும் வழிமுறைகளுக்கு எடுத்துச் செல் வதோ முறையானதாக இருக்காது" என தனது அறிவிப்பில் வலியுறுத்தி யுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி காலை ருக்கி பெர் னாண்டோவும் வேறு இரு ஊடக வியலாளர்களும் இரணைத்தீவிற் குச் செல்லும் நோக்கில் முழங்காவி லிலுள்ள இரணைமாதா நகரைச் சென்றடைந்தனர். ஆனால், அங்குள்ள சோதனைச்சாவடியில் அவர்கள் மூவரும் படகில் ஏறிச் செல்வதை தடுத்தனர். இதன் மூலம் இரணைத் தீவிற்கு செல்லும் தனது நடமாடும் சுதந்திரம் தடுக்கப்பட்டது என்று அவர் முறையிட்டார்.

இதையடுத்து, அந்த ஆணைக்குழு இலங்கை கடற்படையிடமிருந்து அறிக்கை ஒன்றை கோரியது.

இதற்கு பதிலளித்த கடற்படைத் தளபதி, கடற்படை தலைமையகத் திற்கும் வடக்கு மத்திய கடற்படை கட்டளைப்பிரிவுக்கும் இடையே "தொடர் பாடல் இடைவெளி" இருந்தமையே காரணம், எந்த ஊடகவியலாளரும் அங்கு செல்வதற்கு அனுமதி மறுக் கப்படவில்லை என்று கூறியிருந்தார்.

அதையே ஒரு முரண்பாடாகக் கருத முடியும். ஏனென்றால், "ஏதாவது ஊடகவியலாளர் எதிர்காலத்தில் அந்த தீவிற்குச் செல்ல வேண்டுமென்றால் அவர்கள் முதலில் கடற்படையினருக்கு தெரிவிக்க வேண்டும், அதையடுத்து அவர்கள் அத்தீவிற்குச் செல்வதற் கான பயண ஒழுங்கு தொடர்பில் கடற் படை உதவ முடியும்" என கடற்படை தலைமையகம் தனது பதிலில் தெரிவித் துள்ளதாக, இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழு தனது அறிக் கையில் மேற்கோள் காட்டியுள்ளது.

தமது விசாரணையில் ஒரு பகுதி யாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கிளிநொச்சி மாவட் டச் செயலகத்திலிருந்தும் ஓர் அறிக் கையை கோரியிருந்தது. அதில் அவர்கள் "இரணைத்தீவில் பொலிஸ் மையம் ஒன்று இல்லாததால், பொது வாக அப்பகுதியில் இடம்பெறும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை கடற்படை விழிப்பாக உள் ளது. அதனால், இரணைத்தீவில் வசிக் காதவர்கள் யாரும் அங்கு செல்ல முயன் றால், அவர்களது அடையாளத்தை கடற்படையினர் சோதனை செய்கின் றனர்" என பதிலளித்திருந்தனர்.

ருக்கியும் அவரது குழுவினரும் இரணைத்தீவிற்குச் செல்வதற்காக ஒரு வாகனத்தை வாடகைக்கு எடுத்தி ருந்தனர்.

"கொழும்பிலிருந்து ஒரு வாகனத் தில் நாங்கள் இரவு முழங்காவில் சென் றோம். அங்கிருந்து இரணைத்தீவிற் குச் செல்வதற்காக உள்ளூர் மீனவர் களிடமிருந்து ஒரு படகையும் ஏற்பாடு செய்திருந்தோம். அங்கு உள்ளூர் பங்குத்தந்தை உட்பட பலர் அங்கு எமக்காக காத்திருந்தனர். அங்கு உள்ளூர் மக்கள் ஏற்பாடு செய்தி ருந்த ஒரு போராட்டம் மற்றும் கூட்டத் தில் நானும் பங்குபற்ற எண்ணியிருந் தேன். அங்குள்ள பழமையான கத் தோலிக்க தேவாலயத்திற்கு விஜயம் செய்யவும், அந்த தீவில் நிலவும் சமூக, பொருளாதார, அரசியல் சூழல் குறித்து ஒரு கட்டுரை எழுதவும் நான் திட்டமிட்டிருந்தேன். ஆனால் கடற் படையின் தன்னிச்சையான கட்டுப்பாடு கள் காரணமாக என்னால் இதில் எதை யும் செய்ய முடியவில்லை".

சில மாதங்களுக்கு முன்னர் நெதர்லாந்து நாட்டு ஊடகம் ஒன்றிற்கு பணியாற்றும் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த புகைப்பட ஊடகவியலாளரான எல்க் ஸ்கொலியர்ஸ் இரணைத்தீவிற் குச் செல்வதிலிருந்து தடுக்கப்பட்டார். புதுடெல்லியைத் தளமாகக் கொண்டு பல ஊடகங்களுக்குச் செயற்படும் அவர் செய்தி சேகரிப்பிற்காக முன் அனுமதியும், ஊடக அமைச்சிலிருந்து அதற்கான அங்கீகார அட்டையை பெற்றிருந்தார்.

"இலங்கைகு பணி நிமித்தமாகச் சென்றுள்ளேன். முழங்காவிலுள்ள கடற் படை மற்றும் பதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் ஒரு புகைப்பட ஊடக வியலாளர் என்ற வகையில் என்னை இரணைத்தீவிற்குச் செல்லவிடாமல் தடுத்

தொடர்ச்சி▼



# பழுதடைந்த உருளைக்கிழங்கு விதைகளை கிளிநொச்சியில் புதைப்பதற்கு நடவடிக்கை






பழுதடைந்த உருளைக்கிழங்கு விதைகளை கிளிநொச்சி வனவளத் திணைக்களத்திற்கு சொந்தமான காட்டுப்பகுதியில் உரிய நடைமுறைகளை பின்பற்றி புதைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குப்பிளான் களஞ்சியசாலையில் இருந்து நேற்று உருளைக்கிழங்கு விதைகளை பொதி செய்து வாகனத்தில் ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - குப்பிளானில் உள்ள களஞ்சியசாலையில் பழுதடைந்த உருளைகிழங்கு விதைகளை பொலித்தீன் பையில் பாதுகாப்பாக அகற்றி விவசாய நிலங்கள், நிலத்தடிநீர் மற்றும் குடியிருப்புக்களை பாதிக்காத வகையில் புதைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாய திணைக்களத்தின் கண்காணிப்பில் மூன்று அடி ஆழத்திற்கு கீழே பாதுகாப்பு முறைமைகளை கையாண்டு சில தினங்களுக்குள் பழுதான உருளைக்கிழங்கு விதைகள் புதைக்கப்படவுள்ளன.

இதன்மூலம் பொதுமக்களுக்கோ விவசாயிகளுக்கோ மண்ணுக்கோ நிலத்தடி நீருக்கோ பாதிப்பு ஏற்படாது என துறைசார் தரப்புகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பிலான கலந்துரையாடல் திணைக்கள தலைவர்கள், துறைசார் அதிகாரிகள் விவசாயிகளுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது உருளைக்கிழங்கு விதைகளை நெகிழிப் பைகளில் பெ-ாதி செய்து பாதுகாப்பாக களஞ்சிய சாலையில் இருந்து அகற்றி பாவனையற்ற வெளியான பகுதிகளில் புதைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைத்த 21 மெட்ரிக் தொன் உருளைக்கிழங்கு விதைகள் குப்பிளானில் அண்மையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி விதை உருளைக்கிழங்குகள் பெக்டோ பெக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பக்டீரியா தாக்கத்திற்கு உள்ளாமையினால் பழுதடைந்திருந்தமை தொடர்பில் கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி கண்டறியப்பட்டது.

இந்த பக்டீரியா தாக்கத்தினால் 21 மெட்ரிக் தொன் விதை உருளைக் கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது.





# இலங்கைப் பிரஜைகள் இரணைத்தீவிற்குச் செல்வதற்கு கடற்படை தடை விதிக்கக் கூடாது என்று அறிவுறுத்தல்

தொடர்ச்சி▲

துள்ளனர். இலங்கையில் சட்டபூர்வமாகப் பணியாற்ற அனுமதியும் பெறிருந்தேன். கடற்படை என்னை எதையும் எக்ஸ் தளத்தில் பதிவிடக்கூடாது (ட்வீட்) செய்யக் கூடாது என்று அறிவுறுத்தினர்" என அவர் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி பதிவிட்டிருந்தார்.

எனினும், சில மணி நேரங்கள் மற்றும் ஏராளமான தொலைபேசி அழைப்புகள் ஆகியவற்றை அடுத்து இறுதியாக அவரால் அந்த தீவிற்குச் செல்ல முடிந்தது. அதை அவர் பின்னர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

"6 மணி நேரமாக நான் பல கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்தும், உள்விவகார அமைச்சு மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உதவியுடனும், என்னால் இரணைத்தீவைச் சென்றடைய முடிந்தது. இந்த ஆறு மணி நேரத்தில் சுமார் 50 தொலைபேசி அழைப்புகளும், சுமார் 15 மின்னஞ்சல்களும் அனுப்ப வேண்டியிருந்தது" என்று அவர் தனது எக்ஸ் தளத்தில் பின்னர் கூறியிருந்தார்.

இலங்கை கடற்படையின் நடவடிக்கை சட்ட ரீதியாக இல்லை என மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டறிந்தாலும், தமது உரிமை மீறல்களை அங்கீகரித்து அதற்கு தனக்கு எழுத்து மூலமான மன்னிப்பையும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அந்த ஆணைக்குழு மறுத்துவிட்டது என ருக்கி பெர்னாண்டோ கூறுகிறார்.

இதில் தான் இரணைத்தீவிற்குச் சென்றுவந்த செலவீனங்கள் மற்றும் தனது உரிமைகள் மீறப்பட்டதற்கான இழப்பீட்டுத் தொகையும் அடங்கும் என்கிறார் அவர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இப்போது "இலங்கை கடற்படை வடக்கு மத்திய கட்டளைப் பிரிவிலுள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி, அதில் எவ்விதத் தடையுமின்றி, முன் அனுமதி அல்லது அறிவிப்புச் செய்யாமல் இலங்கையின் அனைத்து குடிமக்களும் இரணைத்தீவிற்குள் நுழைய முடியும் என தெரிவிக்க வேண்டும்" என வலியுறுத்தியுள்ளது.

# இந்தியா விரும்பும் தெற்கு வேட்பாளரையே வடக்கு - கிழக்குத் தமிழர்கள் ஆதரிப்பார்கள்

## தமிழ் பொது வேட்பாளர் நடைமுறைச் சாத்தியமற்றது என்று ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க தெரிவிப்பு



"தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயம் அரசியல் களத்தில் பேசு பொருள் மாத்திரமே. அது நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயமாகும். அவ்வாறான முயற்சி இடம்பெற்றாலும் இந்தியாவின் கோரிக்கையின் பிரகாரம் அதனைக் கடைசியில் கைவிட்டு விடுவார்கள். இந்தியா விரும்பும் தெற்கு வேட்பாளரையே வடக்கு – கிழக்குத் தமிழர்கள் ஆதரிப்பார்கள்."

– இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதித்தேர்தல்விவகாரம்தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"அரசியல் களத்தில் நாடி பிடித்துப் பார்ப்பதற்காக அவ்வப்போது ஏதேனும் ஏற்பாடுகள் இடம்பெறும். அந்த வகையிலேயே தமிழ் பொது வேட்பாளர் விடயமும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும், இது நடைமுறைச் சாத்தியமற்ற விடயம். அதைப் பற்றிப் பேசிப் பயன் இல்லை.

ஏனெனில் இலங்கையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலானது இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையிலான போட்டியாகவே அமையவுள்ளது.

கடைசியாக மாலைதீவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இந்த நிலைமையே காணப்பட்டது. அந்தவகையில் மொட்டுக் கட்சி தரப்புக்குச் சீனாவும், சஜித் தரப்புக்கு இந்தியாவும் பின்புலமாக இருக்கும்.

தற்போது தமிழ் பொது வேட்பாளர் பற்றி பேசுபவர்கள், இந்தியாவின் கோரிக்கையை ஏற்று, அந்நாடு சார்பு தெற்கு வேட்பாளரையே ஆதரிப்பார்கள்.

அதேவேளை, தேசிய இனப்பிரச்சினைக்குச் சுய நிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ள கட்சி எமது கட்சியாகும். இங்குள்ள கட்சிகளிடம் இந்தக் கொள்கை இல்லை. எனவே, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மையப்படுத்தியதாக எமது கட்சியும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கும்." – என்றார்.

# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 19 வயது இளைஞர் சடலமாக மீட்பு!

(ராமு தனராஜா)

பதுளை, கந்தகொல்ல தமன்வர பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, தமன்வர கந்தகொல்ல, புடலுமுல்ல பகுதியைச் 19 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

மேற்படி இளைஞர் நேற்றுமுன்தினம் வீட்டை விட்டு வெளியேறிய நிலையில் வீடு திரும்பாததால் நேற்று அவரது உறவினர்கள் மற்றும் கிராம மக்கள் இணைந்து தேடுதல் மேற்கொண்டபோது, கந்தகொல்லை பாடசாலைக்கு அருகாமையில் உள்ள ஹெய்னரன்கொல்ல ஓயா பாலத்துக்கு அருகில் அவரின் மோட்டார் சைக்கிள் கண்டெடுக்கப்பட்டது.

இதையடுத்து அவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து நீரோடையின் கீழ் பகுதியில் மேற்கொண்ட சோதனையின்போதே உயிரிழந்தவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் கண்டெடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகப் பதுளை போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பதுளை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# நித்தியவெட்டை பகுதியில் இளைஞனின் சடலம் மீட்பு



வடமராட்சி கிழக்கு – நித்தியவெட்டை பகுதியிலுள்ள குறுக்கு வீதியொன்றில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நித்தியவெட்டை பகுதியை சேர்ந்த 23 வயதான இளைஞனின் சடலமே மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வீட்டிலிருந்து வெளியேறிய மேற்படி இளைஞர் இரவு வரை வீடு திரும்பாததையடுத்து உறவினர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையில், ஒழுங்கையொன்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனைகளின் பின்னரே, இந்த மரணம் கொலையா என்பது குறித்து தெரியவரும் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கிளிநொச்சி பதில் நீதவான் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை நடத்தியதன் பின், சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பொதுக் கழிப்பறைக் கட்டணமும் வற் வரி அதிகரிப்பால் உயர்கின்றது



வற் வரித் திருத்தங்களுக்கு அமைய, பொதுக் கழிப்பறைகள் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நீர் கட்டணம் அதிகரிப்பு காரணமாகவே இவ்வாறு பொதுக் கழிப்பறைக்கான கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கழிப்பறைகளை பயன்படுத்துவதற்கு இதுவரை வசூலிக்கப்பட்ட கட்டணம் பத்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 20 ரூபாவாக இருந்த கழிவறை கட்டணம் புதிய திருத்தத்தின் கீழ் 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.




# புதிய அரசமைப்பின் ஊடாகவே தீர்வு என்பது தென்னிலங்கை இனவாதிகளின் கபடத்தனம்

## ஈ.பி.டி.பியின் பேச்சாளர் ஐயாத்துரை ரங்கேஸ்வரன் கூறுகிறார்

"புதிய அரசமைப்பின் ஊடாகத் தான் தீர்வு காணப்பட வேண்டும் என்று இரா. சம்பந்தன் கூறியிருக்கின்றார். இது இழுத்தடிப்பு செய்கின்ற கபடத்தனமான நடவடிக்கை. தென்னிலங்கை இனவாதிகளுக்குத் துணைபோகின்ற செயற்பாடு."

– இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி ஊடக பேச்சாளர் ஐயாத்துரை ரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் புதிய அரசமைப்பின் ஊடாகத்தான் தீர்வு காணப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஐயா புத்தாண்டுச் செய்தியில் சொன்னார் ஊடகங்களில் வந்துள்ளன. உண்மையில் புதிய அரசமைப்பின் ஊடாக வட., கிழக்கு மக்களின் அரசியல் உரிமை சம்பந்தமாக அவ்வப்போது சம்பந்தன் ஐயா கருத்தைச் சொல்லி வந்திருந்தாலும் இந்த ஆண்டு தீர்க்கமான முடிவு எடுப்பேன். தமிழர்கள் தீர்க்கமான முடிவு எடுப்பார்கள் என்ற செய்தியையும் அவர் சொல்கிறார்.

புதிய அரசமைப்பு என்பது ஓர் இழுத்தடிப்பு செய்கின்ற ஒரு கபடத்தனமான நடவடிக்கை. தென்னிலங்கை இனவாதிகளுக்கு துணைபோகிற செயற்பாட்டைத்தான் சம்பந்தன் ஐயா இந்தச் செய்தியாகச் சொல்கிறார் என்றுதான் நாங்கள் பார்க்கிறோம். ஏனென்றால் இருக்கின்ற அரசமைப்பை நாங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரமோ அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையோ அல்லது சர்வசன வாக்கெடுப்போ தேவையில்லை. ஆனால் புதிய அரசமைப்பு என்று ஒன்று வருகிற போது அது நாடாளுமன்றத்திற்கு விடப்பட்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று, அதன் பின்னர் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதிலும் அது வெற்றி கண்டால் மட்டுமே அது நடைமுறைப்படுத்த முடியும். அவ்வாறுதான் எங்கடை அரசமைப்பு இருக்கிறது.

ஆக சம்பந்தன் ஐயா நாள் ஒரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக ஒவ்வொரு கருத்துக்களை சொல்லிக் கொண்டு இருக்கிறார். அவ்வப்போது இக்காலப்பகுதிகளில் பல்வேறு கருத்துக்களை சொல்லிக் கொண்டிருக்கிறார். நல்லாட்சி அரசு இருந்த பொழுது கூட அவர்களிற்கு நிறைய வாய்ப்பு இருந்தது. நல்லாட்சி அரசிலே 16 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடனே அந்த அரசாங்கம் நீடிக்க வேண்டிய நிலமை இருந்தது. அந்த நேரத்தில் பேரம் பேசி பல்வேறு விடயங்களை செயற்படுத்தி இருக்க முடியும். ஆனால் இன்று புதிய அரசமைப்பின் ஊடாக என்று ஒன்றை அவர் முன்னெடுப்பது தென்னிலங்கை இனவாத அரசியல்வாதிகளுக்கு ஒரு துணைபோகிற செயற்பாடாகத்தான் இருக்கிறது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக வருகின்ற அரசமைப்பின் 13 ஆம்திருத்தத்தை ஓர் ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு, எங்களது தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிப் படிப்படியாக முன்னேறுவோம் என்று கடந்த காலங்களில் நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். அந்த கால கட்டங்களிலே தாங்கள் இந்த 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அல்லது இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை எந்த வகையிலும் திரும்பிப் பார்கவில்லை, எங்களுக்கு அபிவிருத்தியும் வேண்டாம், சர்வதேசம்தான் எங்களிற்கு தீர்வை வைக்க வேண்டும் எனப் பல்வேறு கால கட்டங்களில் இழுத்தடிப்பை செய்தார்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சம்பந்தன் ஐயா தலைமையில் இருந்தவர்கள்.

கிடைத்த வாய்ப்புக்கள் எல்லாவற்றையும் நழுவவிட்டு விட்டனர். அந்த 13 ஆவது திருத்தம் தொடர்பில் நாங்கள் கடந்தகாலங்களிலேயே வலியுறுத்தி வந்தோம். பேசாப் பொருளாக இருந்த அந்த விடயத்தை பேசு பொருளாக மாற்றியமைத்தது ஈ.பி.டி.பி தான்.

இன்று ஐ.நா விலே மனித உரிமை பேரவையிலே சொல்லப்படுகிற விடயம் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் வந்த 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்தி மேலும் அதிகாரங்களைப் பெறலாம் அல்லது பிளஸ் என்று கூடப் போகலாம் என்ற விடயத்தை சொல்லி இருக்கிறார்கள்." – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.01.2024

## மேஷம்

இன்று செயல்கள் அனைத்தும் சுமூகமாக நடக்கும். உங்கள் வீட்டில் விருந் தினர் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருப்பீர்கள். அவர்களுடன் சேர்ந்து மகிழும் வாய்ப்பு பெறுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

## ரிஷபம்

இன்று நீங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் பேசும் போது பாதகமான விளைவுகள் ஏற்படா வண்ணம் வார்த்தைகளை கவனித்துப் பேச வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணியில் குறைந்த அளவு திருப்தியே காணப்படும். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

உங்களின் பதட்டமான மனநிலை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நல்ல புரிந்துணர்விற்கு நட்பான அங்குமுறை வேண்டும்.

இன்று நிதிநிலைமை லாபம் தரும் வகையில் அதிர்ஷ்ட கரமாக இருக்காது. தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவ தன் மூலம் இன்றைய நாளை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பற்களை நன்கு பாதுகாக்க வேண்டும். உணவில் கவனம் தேவை.

## மிதுனம்

இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். சவால்கள் நிறைந்து காணப் படும் நாள் என்பதால் உங்கள் உணர்வு களை கட்டுபடுத்த வேண்டும். மனக் குழப்பங்களை நீக்கி தெளிவாக இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்களின் நேர்மறையான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத் திக் கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் திருப்தியும் நிலவும்.

அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் கணிசமான தொகை சேர்க்கும் வாய்ப்பும் இன்று குறைவு. இன்று அதிர்ஷ்டமும் உங்களுக்கு சாதகமாக இல்லை.

## கடகம்

இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்க ளிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப் படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்த லாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.

## சிம்மம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் அன்றாட செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். பிறரிடம் உரையாடுவதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசித்து உரையாடுங்கள். பிரார்த்தனை மூலம் உங்களுக்கு மன ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களைக் கையாள்வதை கடின மாக உணர்வீர்கள். பொறுமையாக விஷயங்களைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் துணையிடம் எதிர்மறை யான உணர்வுகளை வெளிப்படுத்துவதை தவிர்க்கவும்.

பணபுழக்கம் போதிய அளவில் இருக்காது. உங்கள் நெருங்கிய நபர் ஒருவரின் திடீர் மருத்துவ செலவை சந்திக்க நேரும்.

## கன்னி

இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் உடன் பிறந்தவர்களால் தொல்லையும் பிரச்சினைகளும் ஏற்படும். இன்று அவர்களை தவிர்ப்பது நல்லது.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. கடினமாக உழைத்தாலும் உங்கள் உழைப்புக்கு தகுந்த அங்கீ காரமும் நன்மதிப்பும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் பேசும் போது அமைதியைக் கடைபிடிக்கவும். சில சமயங்களில் நீங்கள் அமைதி இழக்க நேரலாம். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு காணப் படாது. பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் அதிகம் செலவு செய்ய நேரும்.

## துலாம்

இன்று உங்கள் லட்சியங்களை அடைவதற்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். இன்று நீங்கள் சமயோசித புத்தியுடன் செயல்பட வேண்டும். உங்கள் இலக்கு களை அடைவதில் உறுதியாக இருக்க வேண்டும்.

இன்று அதிகப் பணிகள் காரணமாக சோர்ந்து போவீர் கள். எனவே பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அப்பொழுதான் அதற்குரிய பலன் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண இத்தை கைய உணர்ச்சிகளை தவிர்ப்பது நல்லது.

பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. பணத்தை முடிந்த அளவு சேமிக்க நீங்கள் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## விருச்சிகம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய இன்று கடினமாக உழைக்க வேண்டும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு தன்னம்பிக்கை அவசியம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். நல்ல பலன் காண பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

பணிகளைக் கையாளும்போது உங்கள் திறமை களை வெளிபடுத்துவீர்கள். உங்கள் பணிக்கு தகுந்த அங்கீகாரமும் நன் மதிப்பும் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாகவும் நேரடியாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

நிதிநிலையில் இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் தன்னம்பிக்கை காரணமாக இன்று நீங்கள் துடிப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.01.2024

## தனுசு

இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை குறைந்த முயற்சியில் செய்து முடிப்பீர்கள். புதிய முதலீடுகள் நன்மை அளிக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியிடத்தில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைந்து செய்து முடிப்பீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உங்கள் துணையிடம் மகிழ்ச்சி காண்பீர்கள்.

இன்று போதிய பண வரவு காணப்படும். உங்கள் குடும்ப அபிவிருத்திக்காக செலவு செய்வீர்கள்.

## கும்பம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் இருக்காது. உங்கள் மனக் குழப்பமும் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும். இது உங்களுக்கு பாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான பலன்கள் காணப்படாது. அதிக வேலை காரணமாக உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேரலாம். எனவே இன்று மகிழ்ச்சியுடன் இருக்க நட்பான உறவை பகிர்ந்து கொள்வது நல்லது.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருக்கும். பணப்பற்றாக்குறை காரணமாக உங்கள் உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது.

## மகரம்

இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே எற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர்கள்.பணிகள் அதிகம் காணப்படுவதால் ஒய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும்.

## மீனம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.





# தேசிய மட்ட கராத்தேப் போட்டியில் அல் ஹிதாயா மாணவனுக்கு தங்கம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

13ஆவது தேசிய மட்ட கராத்தே போட்டியில் ஓட்டமாவடி, மீராவோடை அல் ஹிதாயா மாணவன் இப்திசாம் கனிஸ்ட பிரிவு காதா போட்டியில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

தேசிய சொட்டக்கன் கராத்தே சம்மேளனம் தனது 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்த 13ஆவது தேசிய சொட்டக்கன் கராத்தே சம்பியன் போட்டி அண்மையில் சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இதில் நாடளாவிய ரீதியில் இருந்து பலர் கலந்துகொண்டனர். பல பிரிவுகளாக நடந்த இப்போட்டியில் ஓட்டமாவடி, மீராவோடை அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தில் தரம் 8இல் கல்வி கற்கும் இ.இப்திசாம், கனிஷ்ட பிரிவில் கலந்து கொண்டு காதா போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்று சாதித்துள்ளார்.

இவர் தமது பாடசாலையின் கராத்தே ஆசிரியர் சிஹான் எம்.எஸ்.வஹாப் தீனிடம் பயிற்சிகளைப் பெற்றுவருகிறார்.

ஏற்கனவே இவர் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்களை சுவீகரித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.






# தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் வெள்ளி வென்றார் பொலன்னறுவை மாணவன்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசியமட்டத்தில் பளுதூக்கல் போட்டியில் பொலன்னறுவை சேனபுர அல் அமீன் வித்தியாலய மாணவன் என்.நஜீப் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி பொலன்னறுவ தேசிய உள்ளக விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பொலன்னறுவ, சேனபுர அல்-அமீன் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் என்.நஜீப் 17 வயதுக்குட்டவர்களுக்கான போட்டியில் 69 கிலோப் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

அதேவேளை, இவர் 2023ஆம் ஆண்டுக்கான திம்புலாகலை வலய மட்டப் போட்டிகளில் ஈட்டி எறிதல், குண்டு போடுதல், பரிதி வட்டம் வீசுதல் போன்ற போட்டிகளில் முதலாமிடங்களைப் பெற்றுள்ளார். அத்துடன், வட மத்திய மாகாணத்தில் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.